Government of Western Australia
Child and Adolescent Health Service

Perth Children's Hospital

# ‘பெர்த் குழந்தைகள் மருத்துவமனை’-யின் அவசர சிகிச்சைப் பிரிவு உங்களது வரவை ஏற்கிறது

உங்களுடைய பிள்ளைக்குத் தேவைப்படும் கவனிப்பினை அளிப்பதற்காகவே நாங்கள் இருக்கிறோம்.

மருத்துவ அவசர நிலை அல்லது மன-நல அவசர நிலைகளில் இருக்கும் 15 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு நாங்கள் பராமரிப்பு அளிக்கிறோம். ஆஸ்திரேலியப் பிரசைகள் அல்லது ஆஸ்திரேலிய வதிவாளர்களுக்கு இது இலவசம்.

‘பெர்த் குழந்தைகள் மருத்துவமனை’யை ‘PCH’ என்றும் அழைப்பர். அவசர சிகிச்சைப் பிரிவை ‘ED’ என்றும் சொல்வர்.



**மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை**

நாங்கள் பேசுவது உங்களுக்கு விளங்கவில்லை என்றாலோ, எம்முடன் பேச உங்களுக்கு உதவி தேவைப்பட்டாலோ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். இந்த சேவை இலவசம்.

**காத்திருப்பு நேரங்கள்**

நோய்வாய்ப்பட்டிருக்கும் பல குழந்தைகள் இங்கு காத்துக்கொண்டிருக்கும் நிலையில், ‘அவசர சிகிச்சைப் பிரி’வில் பணியாற்றுபவர்கள் அதிக வேலையாக இருக்கக்கூடும். மிகவும் சுகவீனமாக இருக்கும் குழந்தைகள் முதலில் கவனிக்கப்படுவார்கள். நீங்கள் ஆம்புலன்ஸ் வாகனம் மூலமாக வந்தால், நீங்கள் கவனிக்கப்படும் நேரங்களும், காத்திருப்பு நேரங்களும் அதே வரிசைப்படியே இருக்கும்.

உங்களுடைய பிள்ளைக்கு சிகிச்சை அளிக்கப்படுவதற்கு முன்பாக நீங்கள் இங்கிருந்து செல்லவேண்டும் என்று விரும்பினால், தயவு செய்து எமக்குத் தெரிவியுங்கள்.

## ‘அவசர சிகிச்சைப் பிரி’வில் என்ன நடக்கும்



**‘ட்ரையாஜ்’**
மருத்துவர் ஒருவருடைய கவனிப்பு உங்களுடைய குழந்தைக்கு எவ்வளவு விரைவாகத் தேவைப்படுகிறது என்பதைத் தீர்மானிக்க ‘ட்ரையாஜ்’ எனும் செயல்முறை பணியாளர்களுக்கு உதவுகிறது. அவர்கள் உங்களுடைய பிள்ளையைப் பரிசோதிப்பார்கள், மற்றும் உங்களிடம் சில கேள்விகள் கேட்பார்கள்.



**உங்களை ஒருவர் பார்க்கும் வரை காத்திருங்கள்**

செவிலி அல்லது மருத்துவர் ஒருவர் உங்களுடைய பிள்ளையைப் பார்க்கக் காத்திருப்பதற்காக நீங்கள் ‘அவசர சிகிச்சைப் பிரி’விற்குள் செல்வீர்கள். நீங்கள் காத்துக்கொண்டிருக்கும் வேளையில் எழுத்தர் ஒருவர் உங்களிடம் சில கேள்விகள் கேட்பார்.



**செவிலி அல்லது மருத்துவர் ஒருவர் உங்களைப் பார்ப்பார்**

பிரச்சினை என்ன என்று விளங்கிக்கொள்வதற்காக அவர் உங்களைக் கேள்விகள் கேட்பார், மற்றும் குழந்தையைப் பரிசோதிப்பார்.



**உங்களுடைய செவிலி அல்லது மருத்துவருடன் பேசுங்கள்**

பிரச்சினை என்ன என்பதையும், உங்களுடைய குழந்தைக்குத் தேவைப்படுவது என்ன என்பதையும் மருத்துவர் அல்லது செவிலி உங்களுக்கு விளக்கிச் சொல்வார். எவ்வொரு வேளையிலும் நீங்கள் கேள்விகள் கேட்கலாம்.



**பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை**

பிரச்சினை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள உங்களுடைய பிள்ளைக்கு இரத்த சோதனை, எக்ஸ்-ரே, அல்லது மற்ற சில சோதனைகள் தேவைப்படலாம். ED -யில் இதுக்கும் பொழுது அவர்களுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்க்கூடும். அபடிப்பட்ட நேரத்தில் நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம்.



**திரும்பிச் செல்ல, அல்லது மேலதிக சிகிச்சையைப் பெற இங்கேயே காத்திருங்கள்**

உங்களுடைய பிள்ளையின் நிலை இன்னும் மோசமடையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக, அல்லது உங்களுடைய பிள்ளைக்கு சிகிச்சை பலனளிக்கிறதா என்று பார்ப்பதற்காக உங்களுடைய மருத்துவர் உங்களுடைய பிள்ளையை அவதானிக்கவேண்டியிருக்கலாம். நீங்கள் இந்த இடத்தை விட்டுச் செல்வதற்கு முன்பாக, உங்களுக்கான அறிவுறுத்தல்கள் ஏதும் இருந்தால் அவற்றை நீங்கள் பெறுவீர்கள். இன்னும் அதிக கவனிப்பைப் பெறுவதற்காக உங்களுடைய பிள்ளைக்கு இங்கு தங்கவேண்டிய தேவை இருந்தால், மருத்துவமனையிலுள்ள இன்னொரு அறைக்கு அவர் மாற்றப்படுவார்.

## உங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு அணியினரைச் சந்தியுங்கள்: உங்களுடைய பிள்ளையைக் கவனித்துக்கொள்ள உதவும் பலர் இருக்கிறார்கள்




## உங்களுடைய பிள்ளை வலியில் இருக்கிறது என நீங்கள் நினைத்தால்

தயவு செய்து செவிலி ஒருவருடன் பேசுங்கள் – அவர் உங்களுடைய பிள்ளையை மதிப்பீடு செய்து தகுந்த வலி நிவாரணத்திற்கான ஏற்பாட்டினைச் செய்வார்.

## கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறீர்களா? அது என்னவென்று நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்

Aishwarya's CARE Call




உங்கள் குழந்தையின் நிலை இன்னும் மோசமடைந்துகொண்டிருந்தாலோ, குழந்தை நடந்துகொள்ளும் விதம் வழமைக்கு மாறானதாக இருந்தாலோ, அதை எமக்கு உடனடியாகத் தெரிவியுங்கள். உங்களுடைய குழந்தையைப் பற்றி மிகவும் நன்றாக அறிந்தவர் நீங்களே. நீங்கள் சொல்வதை நாங்கள் செவிமடுத்துக் கேட்போம்.

நீங்கள் பேசும் ஆங்கிலம் குறைவாக இருந்தால், 'Emergency Waiting Room' என்று சொல்லுங்கள், அல்லது உங்களுடைய அறையின் இலக்கத்தை மட்டும் சொன்னால் கூடப் போதும்.

**வீட்டிற்குச் செல்லல்**

வீட்டிற்குச் செல்ல உங்களுடைய பிள்ளை தயாராக இருக்கும் பொழுது, உங்களுடைய பிள்ளையைக் கவனித்துக்கொள்வதற்காக நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றிய சில தகவல்களை மருத்துவரோ, செவிலியோ உங்களுக்குக் கொடுப்பார்கள். உங்களுக்கு இருக்கக்கூடிய கேள்விகள் எதையும் எம்மைக் கேளுங்கள். உங்களுடைய உள்ளூர்ப் பகுதியில் இருக்கும் மருத்துவருக்கான கடிதம் ஒன்றையும் நாங்கள் உங்களுக்குக் கொடுக்கக் கூடும்.

### நீங்கள் வீட்டிற்குச் சென்ற பிறகு

உங்களுடைய மருத்துவர் உங்களுக்குக் கொடுத்திருக்கும் அறிவுறுத்தல்கள் எதையும் பின்பற்றுங்கள். உங்களுடைய பிள்ளையின் நிலையில் முன்னேற்றம் இல்லை என்று நீங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால், நீங்கள்:

- உள்ளூர்ப் பகுதியில் இருக்கும் உங்களுடைய மருத்துவரிடம் நீங்கள் செல்லலாம்;
- 1800 022 222 எனும் இலக்கத்தில் ‘ஹெல்த் டைரெக்ட்’-ஐ அழைக்கலாம்; அல்லது
- ‘ஜீ.பீ’ அவசர கவனிப்பு சிகிச்சையகம்’ (GP Urgent Care Clinic) ஒன்றிற்குச் செல்லலாம்.

நீங்கள் இருப்பது ஒரு அவசர நிலை என்றால், ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றிற்காக ‘மூன்று பூஜ்ய(000)’த்தினை அழையுங்கள், அல்லது அவசர சிகிசைப் பிரிவிற்குத் திரும்பிவாருங்கள்.

### PCH -யில் நீங்கள் இருக்கும் நேரத்தைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள்

பின் வருவனவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள pch.health.wa.gov.au எனும் எமது வலைத்தலத்திற்குச் செல்லுங்கள், அல்லது பணியாளர் அல்லது சுயவிருப்புத் தொண்டர் ஒருவரைக் கேளுங்கள்:

- வாகன நிறுத்தம் (‘விரைவு இறக்கம்’ (‘quick drop’) பகுதியிலிருந்து உங்களுடைய வாகனத்தை வாகனத்-தரிப்பிடம் ஒன்றிற்கு நகர்த்த மறந்துவிடாதீர்கள்)
- கழிவறைகள், நீங்கள் அணுகக்கூடிய மற்ற வசதிகள், குழந்தைப் பராமரிப்பு வசதிகள் மற்றும் குழந்தைகளுக்கு உடுப்பு மாற்றும் மேசைகள்
- உணவுப் பொருட்கள் மற்றும் பானங்கள்
- பின்னூட்டல்கள், பாராட்டுகள் மற்றும் முறைப்பாடுகள்
- இலவச Wi-Fi இண்ட்டெர்நெட் வசதி (HEALTH-Guest நெட்வொர்க், கடவுச்சொல் எதுவும் தேவையில்லை)

பொறுப்புத்துறப்பு: இந்த வெளியீடு பொதுவான கல்வியறிவு மற்றும் தகவல் நோக்கங்களுக்கானதாகும். தேவைப்படும் எவ்வொரு மருத்துவ அறிவுரைக்காகவும் தகுதிபெற்ற சுகாதாரப் பராமரிப்புத் தொழிலர் ஒருவருடன் தொடர்புகொள்ளுங்கள். © பிரசுரிமை – வெஸ்டர்ன் ஆஸ்திரேலிய மாநில ‘குழந்தைகள் மற்றும் இளம்-பிராயத்தினர் சுகாதார சேவை’. சுட்டு இலக்கம் 1416 © பிரசுரிமை CAHS 2021.